## பாடம் - 20
## முஹம்மது நபி (ஸல்) குறித்து உலக அறிஞர்களின் கருத்துக்கள்

## الدرس العشرون
## قالوا عن محمد ﷺ

சில தத்துவஞானிகள், மேலை நாடுகள் மற்றும் கீழை நாடுகளில் உள்ள சில அறிஞர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கூறிய சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவை இந்த நபியின் மகத்துவத்தையும், அவர்களின் அழகிய குணங்களையும், அவர்கள் ஓர் இறைத்தூதர்தான் என்பதையும், அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தின் எதார்த்த நிலையையும் அவர்கள் ஒப்புக்கொண்டதைத் தெளிவுபடுத்துகிறது. இந்தக் கருத்துக்கள் மனமாச்சரியத்திற்கும் இஸ்லாத்தின் எதிரிகள் பரப்பி வைத்திருக்கும் பொய்ச் செய்திகளுக்கும் அப்பாற்பட்டுக் கூறியவையாகும்.

**அறிஞர் பெர்னாட்ஷா (முஹம்மத் எனும் தனது நூலில்) கூறுகிறார்:** (இந்நூலை ஆங்கிலேய அரசு எரித்துவிட்டது.) ‘இந்த உலகம் முஹம்மதைப் போன்ற ஒரு சிந்தனையாளரின் பக்கம் மிகவும் தேவையுயடையதாக உள்ளது. இந்த நபி, தாம் போதித்த இறைமார்க்கத்தை எப்பொழுதும் கண்ணியத்திற்குரிய இடத்திலேயே வைத்துள்ளார். இவரது மார்க்கம் உலகிலுள்ள அனைத்து நாகரிகங்களையும் வென்று ஏனைய எல்லா மதங்களை விடவும் சிறப்புக்கும் கண்ணியத்திற்கும் உரியதாகவே காலாகாலத்துக்கும் திகழும். என் சமுதாய மக்களில் பெரும்பாலோர் தெளிவான ஆதாரத்துடன் இம்மார்க்கத்தில் இணைந்து விட்டனர். ஐரோப்பா கண்டத்தில் இம்மார்க்கம் இன்னும் அதிகமாகப் பரவும்.’

மேலும் அவர் கூறியதாவது: ‘மதவெறி அல்லது அறியாமையின் காரணமாக மத்திய நூற்றாண்டில் மதவாதிகள் முஹம்மது நபியின் மார்க்கத்திற்கு இருள் படர்ந்த- தெளிவற்ற வடிவத்தைக் கொடுத்தனர். முஹம்மது நபியைக் கிறிஸ்தவத்திற்கு எதிரானவராகக் கருதினார்கள். ஆனால் அவர் கூறும் கருத்துக்களை நான் ஆராய்ந்தபோது அவர் திகைப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் உரியவராக இருப்பதைக் காணமுடிந்தது. அதுமட்டுமல்ல அவர் கிறிஸ்தவத்திற்கு எதிரானவர் அல்லர் என்ற முடிவுக்குத்தான் என்னால் வரமுடிந்தது. உண்மையைச் சொல்வதானால் அவர் மனித சமுதாயத்தை மீட்கக்கூடியவர் என்றுதான் சொல்ல வேண்டும். ‘இவ்வுலகத்தின் ஆட்சிப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டால் நம்மைச் சூழ்ந்துள்ள இன்றைய பிரச்சனைகளுக்கு அவரால் நிச்சயம் தீர்வு காணமுடியும். மேலும் இன்று மனித சமுதாயம் ஏங்கிக் கொண்டிருக்கும் அமைதியையும் நற்பாக்கியத்தையும் அவரால் வழங்கிட முடியும்.

**நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயத் தத்துவஞானி தாமஸ் கார்லைல் (Thomas Carlyle 1795-1881) பெருந்தலைவர்கள் (HEROES) எனும் தமது நூலில் கூறுகிறார்:**
‘இஸ்லாம் போலியானது என்றும் முஹம்மத் போலியானவர், ஏமாற்றுக்காரர் என்றும் கூறப்படுவதை இன்றைய காலத்தில் ஒருவர் செவியேற்பது மிகப் பெரிய இழிவாகும். இதுபோன்ற அபத்தமான- வெட்கக்கேடான கருத்துக்கள் பரப்பப்படுவதற்கு எதிராக நாம் போராட வேண்டும். அந்த இறைத்தூதர் கொண்டு வந்த தூதுச்செய்தி பன்னிரண்டு நூற்றாண்டுகளாக ஏறத்தாள இருபது கோடி மக்களுக்கு ஒளி வீசும் விளக்காகவே திகழ்ந்து வருகிறது. எண்ணிலடங்காத இத்தனை கோடி மக்கள் எந்தத் தூதுச் செய்தியை ஏற்று வாழ்ந்து மடிந்தார்களோ அந்தத் தூதுச் செய்தி பொய்யானது, மோசடியானது என்று உங்களில் யாரும் நினைத்துப் பார்க்க முடியுமா?’

**இந்தியத் தத்துவமேதை ராமகிருஷ்ணராவ் கூறுவதாவது:** ‘முஹம்மது தோன்றியபோது அரேபியத் தீபகற்பம் என்பது வெளியில் சொல்லும் அளவுக்குச் சிறந்து விளங்கவில்லை. இத்தகைய பாலைவனத்தில் இருந்து கொண்டுதான் முஹம்மது தமது மகத்தான ஆற்றலால் புதிய உலகையும், புதிய வாழ்வையும், புதிய கலாச் சாரத்தையும் நாகரிகத்தையும் உருவாக்க முடிந்தது. மேலும் (மொரோக்கோ நாட்டின்) மராக்கிஷ் நகரில் இருந்து இந்திய துணைக் கண்டம் வரையில் பரந்து விரிந்திருக்கும் அளவுக்கு புதிய இராஜ்ஜியத்தையும் உருவாக்க முடிந்தது. இன்னும் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் புதிய சிந்தனையையும் புதிய வாழ்க்கை முறையையும் அவரால் ஏற்படுத்த முடிந்தது.’

**கனடாவைச் சேர்ந்த ஸுவைமர் என்ற அறிஞர் கூறுகிறார்:** ‘முஹம்மத் மாபெரும் ஆன்மீகத் தலைவர் என்பதில் சந்தேகமில்லை. மேலும் அவர் ஓர் ஆற்றல் மிக்க சீர்திருத்தவாதியாகவும் தூயமொழியில் பேசக்கூடிய சிறந்த பேச்சாளராகவும் துணிச்சல்மிக்க இராணுவ வீரராகவும் மாபெரும் சிந்தனையாளராகவும் திகழ்ந்தார். இத்தகைய தன்மைகளுக்கு முரணான வேறு தன்மைகளை நாம் அவருக்குக் கற்பிப்பது கூடாது. இப்படிச் சொல்வது தான் சரி என்று அவரது வரலாறும் அவர் கொண்டு வந்த குர்ஆனும் சான்று பகர்கின்றது.’

**சர் வில்லியம் மூர் (Sir William Muir) கூறுவதாவது:** முஸ்லிம்களின் நபி முஹம்மது அவர்கள், சிறு வயது முதல் அவரது ஊர் மக்களால் ஏகோபித்த முறையில் நம்பிக்கைக்குரியவர் எனும் சிறப்புப் பெயர் சூட்டப்பட்டார். இத்தகைய சிறப்பிற்கு அவரது அழகிய குணமும் நன்னடத்தையும் தான் காரணம். எது எப்படியானாலும் புகழ்ந்துரைப்பவர்களின் புகழைவிடவும் அவர் உயர்ந்தவர்தான். அவரைப் பற்றி அறியாதவர்களுக்கு அவரது சிறப்பு தெரியாதுதான். சிறப்புக்குரிய அவரது வரலாற்றை நன்கு ஆய்வு செய்தவர்கள் தான் அவரை நன்கு அறிவார்கள். இறைத்தூதர்களின் வரிசையிலும் உலகச் சிந்தனையாளர்களின் வரிசையிலும் அவருக்கு முதலிடத்தைக் கொடுத் திருப்பது அந்த வரலாறு தான்.

மேலும் அவர் கூறுவதாவது, ‘முஹம்மது தமது தெளிவான பேச்சாலும் எளிமையான மார்க்கத்தாலும் தனித்துவம் பெற்றுத் திகழ்கிறார். சிந்தையைத் திகைக்கவைக்கும் அளவுக்கு பெரும் பணிகளையெல்லாம் அவர் செய்துமுடித்துள்ளார். இஸ்லாமியர்களின் நபி முஹம்மது செய்ததைப்போல உறங்கிக் கொண்டிருந்த மனிதர்களைத் தட்டி எழுப்பி, நற்குணங்களை உயிர்ப்பித்து குறுகிய காலத்தில் நற்குணத்தின் சிறப்பு-அந்தஸ்தை உயர்த்திக் காட்டிய சீர்திருத்தவாதியை உலக வரலாறு கண்டதில்லை.’

**நோபல் பரிசு பெற்ற ரஷ்ய தத்துவஞானி லியோ டோல்ஸ்டாய் (Leo Tolstoy) கூறுகிறார்:** முஹம்மது நபியின் பெருமைக்கு இதுவே போதுமானதாகும். அதாவது கேடு கெட்ட, இழிந்த சமுதாயத்தை சாத்தான்களின் கரங்களிலிருந்தும் இழிவான பழக்கங் களிலிருந்தும் விடுவித்து வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமான பாதையை அவர்களுக்கு வகுத்துக் கொடுத்தார். முஹம்மது கொண்டு வந்த மார்க்கம் அறிவுக்கும் விவேகத்திற்கும் பொருத்தமாக இருப்பதால் உலகம் முழுவதும் அது பரவியே தீரும்.

**நம்ஸாவி ஷப்ரிக் (Austria) என்பவர் கூறுகிறார்:** ‘மனித சமுதாயம் முஹம்மதைப் போன்ற ஒரு மனிதரை தன்னுடன் இணைத்துச் சொல்வதற்குப் பெருமைப் படுகிறது. காரணம் என்னவெனில் அவர் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தும் பத்து நூற்றாண்டுகளுக்கு முன் எத்தகைய சட்டதிட்டங்களை வகுத்து அளிக்க அவரால் முடிந்துள்ளதெனில் ஐரோப்பியர்களாகிய நாம் இது போன்ற சட்டநெறிகள் முழுவதையும் அடையும் பட்சத்தில் முன்னை விட அதிக பாக்கியத்திற்கு உரியவர்களாய் நிச்சயம் திகழ்ந்திருக்க முடியும்!’